**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**அமர்வு வழக்கு எண். 323 / 2012. அ.சா1. கே.கே. போஸ், - நாள் - 29.08.2024.**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

என் கடை இருப்பது உசிலம்பட்டி, பேரையூர் மெயின் ரோட்டில் இருக்கிறது என்றால் சரிதான். எங்கள் கடைக்கு 2 வது பில்டிங் ஆர்.டி.ஓ. அலுவலகம் என்றால் சரிதான். அந்த ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு எதிரில்தான் ஜி.எச். இருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய கடையிலிருந்து எதிர் திசையில்தான் உசிலம்பட்டி காவல் நிலையம் இருக்கிறது என்றால் சரியல்ல. பக்கத்து ரோட்டில்உள்ளது. எங்கள் கடையிலிருந்து காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்தில் போகலாமா என்றால் 10 நிமிடங்கள் ஆகும். எங்கள் கடையிலிருந்து ஜி.எச்-சிற்கு 5 நிமிடம் முதல் 10 நிமிடத்திற்குள் போகலம் என்றால் சரிதான். சம்பவத்திற்கு 5 மாதங்கள்கு முன்பே எதிரியும், எனது மூத்த மகளும் பிரிந்துதான் வாழ்கிறார்கள் என்றால் சரியல்ல. சேர்ந்துதான் வாழ்கிறார்கள். சம்பவத்திற்கு பின்புதான் பிரிந்து வாழ்கிறார்களா என்றால் சரிதான். 2 வது மகளும் எதிரியின் தம்பியும் திருமணம் செய்வது சம்பந்தமாக எங்கள் குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் பிரச்சனை வந்து எனது மகள் என் வீட்டில் வந்து இருந்தார் என்றால் அது தவறு. என் கடையிலிருந்து என் வீடானது பேரையூர் ரோட்டில் இருக்கிறது என்றால் டி.எல்.சி. ஸ்கூலிற்கு எதிர்த்தாற்போல் பேரையூர் ரோட்டில் உள்ளது. என் கடையிலிருந்து என் வீட்டிற்கு 10 நிமிடத்திற்குள் செல்லலாம் என்றால் சரிதான். என் கடை முதல் மாடி தளத்திலிருக்கிறது என்றால் சரிதான். என் கடையின் தலைவாசல் கிழக்குப் பார்த்துள்ளது என்றால் சரிதான். என் கடையிலிருந்து முன்னாடி வராண்டா இருக்கிறது என்றால் சரிதான். அந்த வராண்டாவில் நின்றுதான் வாடிக்கையாளர்கள் அவர்களுக்குத் தேவையான சாமான்கள் கேட்பார்கள்

என்றால் சரிதான். வராண்டாவிற்கும் கடையின் நுழைவாயிலுக்கும் இடையில் டேபிள் மேடை போடப்பட்டுள்ளது என்றால் கடைக்குள் போடப்பட்டுள்ளது. அந்த டேபிள் மேடையைத் தாண்டிதான் என் கடைக்கு போகமுடியும் என்றால் சரிதான். என் கடைக்கு தெற்குப் பக்கத்தில் முதல் மாடியில் டெய்லர் கடையிருக்கிறது என்றால் சரிதான். என் கடைக்கு கீழே அம்பிகா ரெடிமேட்ஸ் என்ற துணை அப்போது இருந்தது என்றால் அதிசயம் ரெடிமேட்ஸ் கடை ஒன்று இருந்தது. என் கடைக்கு வரவேண்டும் என்றால் கீழேயிருந்து 7 படி கடந்துதான் வரவேண்டும் என்றால் சரிதான். என் தம்பி ராஜாகிளி என்பவர் உசிலம்பட்டி பேருந்து நிலையத்திற்குள் வாட்ச் கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். என் கடைக்குள் என் தம்பி எந்த வாட்ச் கடையும் வைக்கவில்லை என்றால் சரிதான். என் கடையை ஒட்டி நெருக்கமாக கடை இருக்கிறது என்றால் இல்லை. என் கடையை ஒட்டி கீழ்ப் பக்கமாக ரோட்டிற்குத் தெற்குப் பக்கம் கிருஷ்ணா லேத் ஒர்க்ஸ் உள்ளது என்றால் சரிதான். என் கடைக்கு கீழே மெயின் ரோட்டில் நெருக்கம் நெருக்கமாக கடைகள் உண்டு என்றால் சரிதான். அது ஜனநடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். படிக்கட்டு, வராண்டா ஆகியவை சிமிண்டால் ஆகிய தரைகள் என்றால் சரிதான். முதன்முதலில் எதிரியைப் பார்க்கும்போது, அவர் வண்டியை ஸ்டாண்டு போட்டு என்னை திட்டிக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. என் கடைக்கு மேலே வந்ததுதான் திட்டினார். நான் கீழே இருந்து மேலே வருவதைப் பார்க்கவில்லை. நான் முதல் விசாரணையில் எதிரி வண்டியை நிறுத்தி கெட்ட வார்த்தை பேசியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எதிரி அடுத்த தெருவில்தான் வண்டியை நிப்பாட்டிவிட்டு வந்தார். நான் சத்தம் கேட்ட பிறகு கடையை விட்டு வெளியே வந்த பிறகுதான் சம்பவம் நடந்தது என்றால் நான் சத்தம் கேட்டு வெளியே வந்தபோது தான் சம்பவம் வாராண்டாவில் சம்பவம் நடந்தது. எதிரியை பார்த்து ஏன் கெட்ட வார்த்தை

பேசுகிறாய் என்று கேட்டுக்கொண்டிருக்கும்போதுதான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். என் கடை ஹோம் அப்ளையன்சும், வீட்டிற்குத் தேவையான பொருட்கள் விற்கும் கடை என்றால் சம்பவத்தின்போது எலெக்ட்ரானிக்ஸ் பொருட்கள் மட்டும்தான் விற்பனை செய்தேன். கடையில் சாமி கும்பிடும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. சம்பவம் நடந்தவுடன் அந்த இடத்தில் கூட்டமாகிவிட்டது என்றால் சரிதான். கூட்டமானவுடன் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்து என்னை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான். எதிரி என்னை கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டார். போலிசார் வந்தபோது, சம்பவம் கேள்விப்பட்டு என் சகோதாரர் ராஜாக்கிளியும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். போலிசார் என் சகோதரருடன்தான் என்னை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தவுடன் சம்பவம் பற்றி என்னிடம் கேட்டார்களா என்றால் என்னை முதலுதவி செய்ய மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அப்போலோ மருத்துவமனையில் வைத்துதான் என்னை போலிசார் விசாரித்தார்கள். நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு செல்லும் முன்பே என் மனைவி சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் என்னை 108 ஆம்புலன்சில் ஏற்றியபிறகுதான் வந்தார். சம்பவம் நடந்து எவ்வளவு நேரத்தில் போலிசார் வந்தார்கள் என்றால் எனக்கு சரியாகத் தெரியாது. நான் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் மயக்கமாக இருந்ததால் நேரம் சரியாகத் தெரியவில்லை. மயக்கநிலை என்பது நான் பதற்றத்தில் இருந்ததைத்தான் கூறுகிறேன். சம்பவத்தில் எதிரிக்கு காயம்பட்டது என்பது போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் எதுவும் சொல்லவில்லை. எனக்கு எதுவும் தெரியாது. எதிரிக்கு காயம்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றும், நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. காயம்பட்டவுடன்

வராண்டா மற்றும் படிக்கட்டில் இரத்தம் பட்டது என்றால் பட்டது. எதிரியின் சட்டையிலும் பட்டது. உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் போலிசார் என்னை பார்த்தார்களா என்றால் முதலுதவி சிகிச்சை முடிந்தபிறகு ஆம்புலன்சில் அனுப்பிவைத்தார்கள். சம்பவ இடத்திலிருந்து உசிலம்பட்டி, அரசு மருத்துவமனை சென்று 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுரை அப்போலோ மருத்துவமனை அனுப்பும் வரை இருந்தார்களா என்றால் இருந்தார்கள். 108 ஆம்புலன்சில் என் மனைவி, தம்பி மற்றும் உறவினர்கள் வந்தார்கள். போலிசார் என்னை சம்பவ இடத்திலும், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் நான் ரத்தம் பட்ட உடையோடு இருந்தேன் என்றால், என் உடையை எப்போது கழற்றினார்கள் என்று ஞாபகமில்லை. என்னுடைய உடையை யார், எப்போது கழற்றினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு பிரவீன்குமார் என்ற மகன் இருக்கிறார் என்றால் சரிதான். நான் அவரை மருத்துவமனையில் பார்த்தேனா என்றால் என் மகன்தான் எனக்கு மருத்தவமனையில் பணம் கட்டினார். போலிசார் என் மகனிடம் சம்பவம் சம்பந்தமாகவோ, மருத்துவமனையில் சேர்த்தது சம்பந்தமாகவோ விசாரித்தார்களா என்றால் என்னை விசாரித்தார்கள். அவரை விசாரித்தார்களா என்று தெரியாது. அப்போலோ மருத்துவமனையில் எனக்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்றால் எனக்கு ஆப்பரேசன் முடிந்த பிறகுதான் சுயநினைவு வந்தது. அதற்கு முன்பு எப்போதெல்லாம் நினைவு வந்தது என்று எனக்குச் சரியாகத் தெரியாது. அப்போலோ மருத்துவமனையில் யார் என்னை அனுமதித்து, விபரம் சொன்னார்கள் என்றால் 108 ஆம்புலன்சில்தான் சேர்த்தார்கள். எனக்கு அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். 3 நாட்கள் ஐ.சி.யூ.-வில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். சா.பொ.1. அரிவாளை நான் சம்பவத்திற்கு பிறகு, நீதிமன்றத்தில்தான் பார்க்கிறேனா என்றால் சரிதான். காவல் நிலையத்தில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அரிவாளுக்கு

தனிப்பட்ட அடையாளம் சென்னேனா என்றால் சொல்லவில்லை. என் கடைக்கு முன்னாடி டேபிள் போட்ட இடத்தில் வெளிச்சத்திற்கு டியூப் லைட் போடப்பட்டுள்ளதா என்றால் போடப்பட்டுள்ளது. அந்த டியூப் லைட்டை 2 கம்பிகளில் தொங்கவிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த டியூப் லைட் பட்டியானது இரும்பிலானது என்றால் சரிதான். அந்தப் பட்டியின் பின்பகுதியின் 2 பகுதிகளும் கூர்மையாக இருக்கும் என்றால் சரிதான். அந்த டியூப் லைட் பட்டியில் இரத்தம் இருந்ததாக போலிசார் கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றினார்கள். கடைக்குள் நிக்கோ பீம் லைட் என்ற அடைப் பெட்டியில் இரத்தக் கறை இருந்ததாக போலிசார் கைப்பற்றினார்களா என்றால் எடுத்திருக்கலாம், எனக்குத் தெரியாது. வழக்கிற்கு 5 மாதங்களுக்கு முன்பாகவே எதிரியும், என் மூத்த மகளும் பிரிந்து தனியாக வாழ்கிறார்கள் என்றால் சரியல்ல. என் பேரப் பிள்ளையை எதிரி சம்பவ தினத்தன்று அழைப்பதற்காக என் பேரனைத் தேடி வந்தாரா என்றால் வந்துதான், அடித்துவிட்டு பேரனை தூக்கிச் சென்றார். நானும், என் மகனும் எதிரியை கடைக்கு வரச் சொன்னதாகவும், அதன்பேரில் எதிரி தன் மகனை தூக்குவதற்காக வந்ததாகவும், அங்கு வைத்து நாங்கள் எதிரியைத் தாக்கி காயத்தி ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. அப்போது எப்படியோ எந்தப் பொருளாலோ எனக்கு காயம் ஏற்பட்டதாகவும், அதைப் பயன்படுத்தி எதிரி மீது பொய்ப் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் சான்றுப் பொருட்களான அரிவாள், எதிரியின் உடை, என்னுடைய உடைகள் ஆகியவை வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை எந்த விதமான ஆயுதத்தைக்கொண்டும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், என் குடும்பத்தாரும் சேர்ந்து எதிரியைத் தாக்கியதாகவும், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் முதல்விசாரணைல் சொன்னதுபோல் எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S
RUSKIN
RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.08.29 12:55:28 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**உசிலம்பட்டி.**